2023 ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை

மாவட்ட செயலகம் - கொழும்பு

செலவு தலைப்பு இலக்கம் 255

தொலைபேசி இலக்கம்	-	0112 369 134 / 0112 369 136
தொலை நகல்	-	0112 369 142
இணையதளம்	-	colombo.dist.gov.lk
மின்அஞ்சல் முகவரி	-	ds@colombo.dist.gov.lk

2023 ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை -

மாவட்ட செயலாளரின் செய்தி .....



நாடு முழுவதையும் பாதித்த பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் போன்றே கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக சுகாதாரத் துறையில் ஏற்பட்ட சவால்களுக்குப் பின்னர் நாடு இயல்பு நிலைக்கு மீண்டெழுந்த நிலைமாற்றக் காலகட்டமாக 2023 ஆம் ஆண்டைக் குறிப்பிடலாம். ஏனைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் அரசாங்க ஒதுக்கீடுகள் மிகக்குறைவாக கிடைக்கப்பெற்ற இக்காலப் பகுதியல் கொழும்பு மாவட்டத்தில் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களால் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு வழிநடாத்துவதும், அதற்கான தலைமைத்துவத்தையும் வழிகாட்டுதலையும் வழங்குதல் என்பது கடும் சவாலாக அமைந்தது. எவ்வாறாயினும், அரசியல் அதிகாரத்துவம் மற்றும் என்னுடன் இணைந்துக்கொண்ட பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலகத்தின் கிளைத் தலைவர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் பதவியணியினர், மாவட்டத்தின் ஏனைய அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்பு காரணமாக குறித்த இலக்குகளை ஆகக் கூடிய மட்டத்தில் எய்துக்கொள்வதற்கு இயன்றது. ஆகையால் இச் சந்தர்ப்பத்தில் அனைவரது ஒத்துழைப்புக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கொழும்பு மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் வழிகாட்டுதலின் ஊடாக, மாவட்டத்தின் மக்களது, பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள், தொழில்முயற்சி அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி மற்றும் ஆன்மீக அபிவிருத்தி ஆகிய தேவைகளை பூர்த்தி செய்யப்படுதலின் முன்னேற்றமும், சுற்றாடல் பாதுகாப்பு அடங்கலாக பல்வேறு துறைகள் பொருட்டு அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மட்டுமல்ல மேல் மாகாண சபையின் ஒதுக்கீடுகளின் கீழ் நடைமுறைப்படுத்திய பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பான செயலாற்றுகையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் ஒதுக்கீடுகளைக் கொண்டு நடைமுறைப்படுத்திய அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக பிரதேச செயலகங்களும் மாவட்ட செயலகமும் இணைந்து பல்வேறு ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளையும் கடந்த ஆண்டில் நடைமுறைப்படுத்தியுள்ளன. தேசிய மற்றும் மத நல்லிணக்கத்தை கருப்பொருளாக கொண்டு, சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு விழா, தைப் பொங்கல் விழா மற்றும் நத்தார் பண்டிகை கொண்டாட்டங்கள் அனைத்து பதவியணியினரின் கூட்டு பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டன. ஒரு மனம்கவரும் அலுவலக சூழலை பராமரிப்பதற்காக பல்வேறு பொழுதுபோக்கு மற்றும் உள-ஆலோசனை திட்டங்களும் செயற்படுத்தப்பட்டன. மேலும், அலுவலக நலன்புரிச் சங்கத்தின் பங்களிப்புடன் நாடக நிகழ்ச்சிகள், இரத்த தான முகாம்கள், கண் மருத்துவ மற்றும் பல் மருத்துவ க்ளினிக்குகள் அடங்கலாக சமூக நலன் திட்டங்களைச் செயற்படுத்தியமைக்கும் எனது பாராட்டுகள் உரித்தாகட்டும்.

எதிர்கால சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், எதிர்பாராமல் எதிர்கொள்ளக்கூடிய சவால்கள் தொடர்பாக புரிந்துக்கொண்டு, நிறுவனத்தின் முகாமைத்துவ அணுகுமுறைகளை மிகவும் சிறந்த முறையில் கையாளுவதன்

மூலம் எதிர்கால இலக்குகளை வெற்றிகரமாக அடைவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், குறிப்பிடத்தக்க சாதனைகளை அடிப்படையாகக் கொண்டு அனைத்து இலக்குகளையும் வெற்றிகரமாக அண்மித்துக்கொள்வதற்கு தமது நேரத்தையும் உழைப்பையும் அர்ப்பணித்த அனைவருக்கும் எனது நன்மதிப்பு உரித்தாகட்டும். இறுதியாக, இவ்வறிக்கையை சரியான நேரத்தில் தயாரித்து வெளியிடுவதில் தங்களை அர்ப்பணித்த திட்டமிடல் அலுவலகத்தின் பணிப்பாளர் அடங்கலாக அனைத்து அலுவலர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கே. ஜீ. விஜேசிறி,

மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்,

கொழும்பு நிர்வாக மாவட்டம்

உள்ளடக்கம்

தொடர் இலக்கம்	தலைப்பு	பக்க இலக்கம்
1.	அத்தியாயம் -நிறுவன விபரத் திரட்டு /செயல்படுத்தலின் சாரம்சம்	
1.1	மாவட்டம் தொடர்பான அறிமுகம்.....	9
1.2	நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி.....	13
1.3	பிரதான பணிகள்.....	14
1.4	*அமைப்பு அட்வைணை குறிப்பு*.....	15
1.5	மாவட்ட செயலகத்தின் கீழ் இயங்கும் பிரதேச செயலகங்கள்	
1.5.1	பிரதேச செயலகங்கள் தொடர்பான அடிப்படை தகவல்கள்.....	16
1.5.2	பிரதேச செயலகங்களில் நிறைவேற்றப்படும் பிரதான பணிகள்.....	17
1.5.3	பிரதேச செயலகங்களின் அடைவுகள்.....	18
1.5.4	பிரதேச செயலகங்ள் எதிர்நோக்கிய சவால்கள்.....	19
1.5.5	பிரதேச செயலகங்களின் எதிர்கால இலக்குகள்.....	19
2.	அத்தியாயம் – முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு (விசேட அடைவுகள்)	
2.1	விசேட அடைவுகள்.....	
2..1.1	பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு...	40
2.1.2	உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து.....	41
2.1.3	தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி.....	41
2.1.4	மனித வள மேம்பாடு.....	42
2.1.5	நுகர்வோர் பாதுகாப்பு.....	42
2.1.6	சமூக பாதுகாப்பு.....	43
2.1.7	சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்பும் மேம்பாடும்.....	43
2.1.8	சமூக மேம்பாடு.....	44
2.1.9	சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பயனுள்ள நில பயன்பாடு.....	45
2.1.10	மத மற்றும் கலாச்சார அலுவல்கள்.....	45
2.2	சவால்கள்.....	
2.2.1	தாபன நிர்வாகம் மற்றும் நிதியிடல்.....	45
2.2.2.	பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு	46
2.2.3	உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து.....	46

தொடர் இலக்கம்		தலைப்பு	பக்க இலக்கம்
	2.2.4	தொழில்முயற்சிகளின் மேம்பாடு.....	47
	2.2.5	மனித வள மேம்பாடு.....	47
	2.2.6	நுகர்வோர் பாதுகாப்பு.....	48
	2.2.7	சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்பும் மேம்பாடும்.....	48
	2.2.8	சமூக மேம்பாடு.....	49
	2.2.9	சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பயனுள்ள நில பயன்பாடு.....	49
	2.3	எதிர்கால இலக்குகள்.....	
	2.3.1	தாபன நிர்வாகம் மற்றும் நிதியிடல்.....	49
	2.3.2	பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு	51
	2.3.3	உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து.....	51
	2.3.4	தொழில்முயற்சிகளின் மேம்பாடு.....	52
	2.3.5	மனித வள மேம்பாடு.....	53
	2.3.6	நுகர்வோர் பாதுகாப்பு.....	54
	2.3.7	சமூக பாதுகாப்பு.....	55
	2.3.8	சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்பும் மேம்பாடும்.....	56
	2.3.9	சமூக மேம்பாடு.....	56
	2.3.10	சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பயனுள்ள நில பயன்பாடு.....	57
	2.3.11	மத மற்றும் கலாச்சார நடவடிக்கைகள்.....	57
3.	அத்தியாயம் - 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை.....		
3.1	நிதிசார் செயலாற்றுகை கூற்று.....		61
3.2	நிதி நிலைதொடர்பான கூற்று.....		62
3.3	காசுப் பாய்ச்சல் தொடர்பான கூற்று.....		63
3.4	நிதிநிலை கூற்றுகள்.....		64
3.5	வருவாய் சேகரிப்பதன் செயலாற்றுகை.....		64
3.6	நிதி.ஒழு விதி 208 பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களில் பிரதிநிதியாக இந்த திணைக்களம் / மாவட்ட செயலகம் / மாகாண சபைக்கு வழங்கிய ஒதுக்கீடு.....		94
3.7	நிதியல்லாத சொத்துக்களை பதிவுசெய்வதன் செயலாற்றுகை.....		97
3.8	கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை.....		107

தொடர் இலக்கம்	தலைப்பு	பக்க இலக்கம்
4.	அத்தியாயம் - செயலாற்றுகை சுட்டிகள்.....	109
5.	அத்தியாயம் - நிலைபேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள் (SDG) பூர்த்தி செய்துகொள்வதன் செயலாற்றுகை.....	128
6.	அத்தியாயம– மனிதவள மேம்பாடு.....	
	6.1 பதவியணி முகாமைத்துவம்.....	190
	6.2 மனிதவள மேம்பாடு.....	191
7.	அத்தியாயம் – இணக்கப்பாட்டு அறிக்கை.....	207

1 ஆம் அத்தியாயம்

நிறுவன விபரத் திரட்டு/ செயல்படுத்தலின் சாரம்சம்

1.1. கொழும்பு மாவட்டம்

மேல் மாகாணத்திற்குரிய கொழும்பு மாவட்டம் வடக்கில் களனி ஆற்றையும், தெற்கில் பாணந்துறை போல்கொட ஆறு மற்றும் களுத்துரை மாவட்டத்தையும், மேற்கில் இந்தியப் பெருங்கடலையும், கிழக்கில் சப்ரகமுவ மாகாணத்தையும் எல்லையாக கொண்டுள்ளது. இலங்கையில் 25 நிருவாக மாவட்டங்களுக்கிடையில் நிலப் பரப்பில் மிகச் சிறிய மாவட்டம் கொழும்பு மாவட்டமாகும். அதன் நிலப் பரப்பு, துறைமுக நகர திட்டத்திற்கான 4.47 சதுர கிலோ மீற்றரும் சேர்த்துக்கொண்டால் 703.47 சதுர கிலோ மீற்றர் ஆகும். நாட்டின் வர்த்தக மற்றும் வர்த்தக தலைநகரான கொழும்பும், நிர்வாகத் தலைநகரான ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே நகரமும் அமைந்துள்ளமை கொழும்பு மாவட்டத்தின் தனித்துவமாகும்.

கொழும்பு மாவட்டம் 13 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் 557 கிராம அலுவலர் பிரிவுகளையும் கொண்டுள்ளதுடன், அதில் 500 பிரிவுகள் நகர்புறப் பிரிவுகளாவதுடன், எஞ்சிய 57 பிரிவுகள் கிராமபுறப் பிரிவுகளாகும். சீத்தாவக்க மற்றும் ஹோமாகம பிரதேச செயலகங்களில் குறித்த கிராமபுறப் பிரிவுகள் அமைந்துள்ளதுடன், ஏனைய பிரதேச செயலகங்களில் அனைத்து பிரிவுகளும் நகர்புறப் பிரிவுகள் என்று பௌதீக திட்டமிடல் திணைக்களத்தால் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேலும், 05 மாநகர சபைகளும், 05 நகர சபைகளும் 13 பிரதேச சபை அதிகாரப் பிரதேசங்களையும் 15 தேர்தல் அதிகாரப் பிரதேசங்களையும் கொண்டுள்ளது.

நாட்டில் அதிக சனத்தொகையும் சனத் தொகை அடர்த்தியும் இந்த மாவட்டம் கொண்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட சனத்தொகை 2,477,922 ஆவதுடன், சனத் தொகை அடர்த்தி சதுர கிலோ மீற்றருக்கு 3,545 ஆகும்.

கொழும்பு,தெகிவளை மற்றும் திம்பிரிகஸ்யாய அதிக சனத்தொகை அடர்த்தியுள்ள பிரிவுகளாகும். சீத்தாவக்க மற்றும் பாதுக்க ஒப்பீட்டளவில் குறைந்த சனத்தொகை அடர்த்தியை காட்டுகின்றது.

நாட்டில் உயர் பொருளாதார செயற்பாட்டினைக் கொண்டுள்ள கொழும்பு மாவட்டமானது, 2022 ஆம் ஆண்டில் தேசிய மொத்த உற்பத்தியில் அதிகூடிய பங்களிப்பை வழங்கியுள்ளது. அதேபோன்று கொழும்பு துறைமுகம், புறக்கோட்டை சார்ந்த மொத்த விற்பனை நிலையங்கள், நாராஹேன்பிட்டிய, இரத்மலானை, மீகொட, பிளியந்தலை ஆகிய மொத்த மற்றும் சில்லறை பொருளாதார நிலையங்களும், வங்கிகள், நிதி மற்றும் காப்புறுதி அடங்கலாக வர்த்தக துறையில் பெரும்பாலாக பிரதான அலுவலகங்களையும் பொருளாதார மையங்களையும் கொண்டு அமைந்துள்ளது. மேலும் புதிய பாதுகாப்பு தலைமையகம் மற்றும் பொலிஸ் தலைமையகம் அடங்கலாக பாதுகாப்பு பிரிவின் முக்கியமான நிறுவனங்களும் மாவட்டத்தில் அமைந்துள்ளது.


இந்த மாவட்டத்தின் அண்மைக்கால அபிவிருத்திச் செயற்பாடுகளும் செயற் திட்டங்களும் இந்நாட்டின் எதிர்காலத்தில் முக்கியமான திருப்புமுனையைக் குறிக்கின்றது. நாட்டின் முதலாவது அதிவேக நெடுஞ்சாலையான தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, கொழும்பு- கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை, புதிய களனி பாலம், வெளிவட்ட வீதித் திட்டங்கள், தெமட்டகொட, நுகேகொட மேம்பாலங்கள் மற்றும் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் மேம்பாலத் திட்டங்கள் ஆகியவை நாட்டின் வீதி மற்றும் போக்குவரத்தில் தனித்துவமான அடையாளங்களாகும்.

இம்மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டே மற்றும் சீத்தாவக்க இராச்சியங்கள் அமைந்திருந்ததுடன், பல தொல்பொருள் எச்சங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும், தீவின் மிகப்பெரிய நன்னீர் நீர்த்தேக்கமான

பொல்கொட ஏரி, பெல்லன்வில-அத்திடிய சரணாலயம் மற்றும் தியவன்னாவ ஆகியவை அதிக உயிரியல் முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுச்சூழல் அமைப்புகளாக அமைந்துள்ளன.

பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் வரலாற்றுத் தனித்தன்மைகளைக் கொண்ட இம்மாவட்டம் எதிர்கொள்ளும் சவால்களாக நகரமயமாதல் மற்றும் அதிக மக்கள் தொகை அடர்த்தி என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும், வறுமை, குழந்தைகள் மற்றும் தாய்வழி ஊட்டச்சத்து குறைபாடு ஆகியன ஏனைய மாவட்டங்களில் போன்று இந்த மாவட்டத்திலும் காணப்படுகிறது. அதேபோன்று நெடுஞ்சாலை வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ள தேசிய வீதி வலையமைப்பின் முதன்மை அம்சங்கள் மாவட்டத்தில் அமைந்திருந்தாலும், கொழும்பு நகரம் உள்ளிட்ட முக்கிய நகரங்களை அண்மித்து காணப்படும் போக்குவரத்து நெரிசல் மற்றும் போதிய பொது போக்குவரத்து சேவைகள் இல்லாத வீதிகள் காணப்படுதல் என்பன போக்குவரத்து துறையில் சவாலாக உள்ளன. அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்கள் மற்றும் நீர்நிலைகள் அடைப்பு காரணமாக, வெள்ளப் பேரிடர் நிலைமைகள் கணிசமாக அதிகரித்துள்ளன. நெற்செய்கை உள்ளிட்ட விவசாய நிலங்கள் வேறு தேவைகளுக்காக மீட்கப்பட்டுள்ளதோடு, விவசாயத்திற்கு பயன்படுத்தக்கூடிய தரிசு நிலங்களை மீள் பயிரிட வேண்டிய தேவையும் எழுந்துள்ளது.

கொழும்பு மாவட்ட வரைபடம்



கொழும்பு மாவட்ட வரைபடம்

1.2. நிறுவனத்தின் தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்

நிறுவனத்தின் தொலை நோக்கு

நல்லாட்சி மற்றும் நிலையான அபிவிருத்தியுடன் முன்னணி திசையில் .....

நிறுவனத்தின் செயற்பணி

தற்போதுள்ள வளங்களின் முகாமை மூலம் ஆக்கப்பூர்வமான மற்றும் நவீனகரமாக மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த மாவட்டத்தை வழிநடத்துதல்


நிறுவனத்தின் குறிக்கோள்கள்

- திறமையான மற்றும் பயனுள்ள மாவட்ட அமைப்பைப் பராமரித்தல்.
- பொதுமக்களின் திருப்தியை அதிகரிக்கும் விதத்தில் பொதுத் துறையின் திறமையான சேவையை உறுதி செய்தல்.
- நன்மைபயக்கும் எண்ணக்கருக்கள், பொறுப்பு, வளங்களை விவேகமாகப் பயன்படுத்துதல், பாரபட்சமற்ற தன்மை, வெளிப்படைத்தன்மை போன்ற மதிப்பு அமைப்புகளை அரச சேவையில் தாபித்தல்.
- பொதுத்துறையில் மனித வள முகாமை தொடர்பான கொள்கைகளை செயல்படுத்துதல்.
- அரச அலுவலர்களின் ஓய்வூதியக் கொள்கைகளுக்கு ஏற்ப திட்டங்களை செயல்படுத்துதல்.
- மாவட்டத்தில் செயல்படும் பல்வேறு அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபைகளால் செயல்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் ஒழுங்கமைத்தல், நிதி மற்றும் நிதி சாரா வளங்களை பயன்படுத்தல் மற்றும் பின்தொடர்தல் நடவடிக்கைகளில் ஒருங்-கிணைப்பாளராக செயல்படுவதன் மூலம் மாவட்ட மக்களின் நலனையும் அபிவிருத்தியையும் மேம்படுத்துதல்.

1.3 பிரதான பணிகள்

- மாவட்ட அதிகார வரம்பிற்குள் உள்ள மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மாவட்ட பாதுகாப்புக் குழுவின் தலைவராக செயற்படல்.
- மாவட்டத்தின் விவசாயம், சுற்றுச் சூழல், இடர் முகாமைத்துவம், தொற்று நோய் தடுப்பு , மகளிர் மற்றும் சிறுவர் குழுக்களின் தலைவராக செயற்பட்டு மாவட்டத்தின் மக்களது பொருளாதார மற்றும் சமூக நல்லிருப்பிற்கு செயற்படுதல்.
- மாவட்டத்தில் கலாச்சார, மத மற்றும் ஏனைய காலோசிதமான அரச நிகழ்வுகளின் தலைவராக செயல்படுதல்.
- பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளராகச் செயற்படுவதன் மூலம் மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்.
- மாவட்டத்திலுள்ள 13 பிரதேச செயலாளர்களுடன் பிராந்திய நிர்வாக நடவடிக்கைகளை வழிநடாத்தும் தலைவராக செயற்படுதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- நிர்வாகப் பணிகளின் போது உற்பத்தித்திறன் மற்றும் தரத்தை அதிகரிக்க நவீன தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் மற்றும் அதற்காக பதவியணியை ஊக்குவித்தல்.
- மாவட்ட அதிகார எல்லைக்குள் அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பவற்றின் பிரதி தலைவராக செயற்பட்டு, குறித்த நிறுவனங்களில் தொலைநோக்கு, குறிக்கோள்கள் மற்றும் பணிகள் நிறைவேற்றும் வகையில் இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- அனைத்து தேர்தல் நடவடிக்கைகளிலும் அதாவது சனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில்களின் போது தேர்தல் ஆணையாளரின் பிரதிநிதியாக, மாவட்ட தெரிவு அத்தாட்சி அலுவலராக செயற்பட்டு நியாயமான மற்றும் பக்கச்சார்பற்ற தேர்தலை நடாத்துதல்.
- மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தில் உள்ள பதவியணியின்


1.4. அமைப்பு விளக்கப்படம்



1.5. மாவட்ட செயலகத்தின் கீழ் இயங்கும் பிரதேச செயலகங்கள்

1.5.1. பிரதேச செயலகங்கள் பற்றிய அடிப்படைத் தகவல்கள்

தொடர் இலக்கம்	பிரதேச செயலகம்	கிராம அலுவலர் பிரிவு	முழு நில அளவு (சதுர கி.மீ.க்கு)	மக்கள் தொகை (2022)	மக்கள் தொகை அடர்த்தி (1 சதுர கி.மீ.க்கு)
1.	கொழும்பு	35	22.47	344,615	15,337
2.	திம்பிரிகஸ்யாய	20	24	253,786	10,574
3.	கொலோன்னாவ	46	28	204,352	7,298
4.	ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே	20	17	115,056	6,768
5.	கடுவெல	57	88	268,694	3,053
6.	மஹரகம	41	38	209,401	5,511
7.	ஹோமாகம	81	121	253,624	2,096
8.	கெஸ்பேவ	73	64	261,435	4,085
9.	சீத்தாவக்க	68	150	121,326	809
10.	பாதுக்க	46	110	69,579	633
11.	தெஹிவளை	15	8	94,840	11,855
12.	இரத்மலானை	13	13	101,816	7,832
13.	மொரட்டுவை	42	20	179,398	8,970
மொத்தம்		**557**	**703.47**	**2,477,922**	**3,522**



1.5.2. கொழும்பு மாவட்டத்தில் உள்ள 13 பிரதேச செயலகங்களினால் மேற்கொள்கின்ற பணிகள் பின்வருமாறாகும்.

i. சட்டரீதியான செயல்பாடுகள்

- பிறப்பு/ விவாகம்/ இறப்புச் சான்றிதழ்கள் உட்பட ஆள் அடையாளத்துடன் தொடர்புடைய செயல்பாடுகள்
- தேசிய அடையாள அட்டைகள் வழங்குதல் மற்றும் மேலொப்பங்களை வழங்குதல்
- அனைத்து வகையான அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல், நிலம் கையகப்படுத்துதல் மற்றும் நில பரிமாற்றம்
- ஓய்வூதியம் செலுத்துவது தொடர்பான நடவடிக்கைகள்

ii. சமூக நல செயல்பாடுகள்

- வெள்ளம் உள்ளிட்ட அனர்த்த நிவாரண நடவடிக்கைகள்
- முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள், கர்ப்பிணிகள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்களுக்கு தனிப்பட்ட உதவிகளை வழங்குதல்

iii. அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் போன்ற நிதி ஆதாரங்களின் கீழ் பொது கழிப்பறைகள், கிராமப்புற வீதிகள், விவசாய வீதிகள் மற்றும் கால்வாய்கள் போன்ற உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல்.

1.5.3. பிரதேச செயலகங்களின் வருடாந்த செயற்திட்டத்தின் முன்னேற்றம்

இல	பிரதேச செயலகம்	2022 ஆண்டு செயற்றிட்டத்தின் முன்னேற்றம்%
01	கொழும்பு	100
02	திம்பிரிகஸ்யாய	
03	கொலன்னாவ	
04	பாதுக்கை	98.5
05	மொறட்டுவ	97
06	ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே	96
07	இரத்மலானை	95
08	சீத்தாவக்க	91
09	தெஹிவளை	
10	கடுவளை	90
11	மஹரகம	
12	ஹோமாகம	89
13	கெஸ்பாவ	84

1.5.4. பிரதேச செயலகங்களின் அடைவுகள்

i கொழும்பு பிரதேச செயலகம்



- 2023 ரூபா.மில். 103 அரசாங்கத்தின் காணிகளுக்கான வரி அறவிடும் இலக்கினை கடந்து ரூபா.மில். 108 ஐ அறவிடுதல்.
- கொலம்புர இலக்கிய விழாவிற்கு இணையாக 03 கலைஞர்களுக்கு கொலம்புர இலக்கியவியல் விருது வழங்குதல்.
- நாட்டின் கிராம அலுவலர் நிருவாக போட்டித் தொடரில் முதலாவது இடம் மாதம்பிட்டிய கிராம அலுவலர் பிரிவுக்குப் பொறுப்பான கிராம அலுவலர் பிரதீப் பேரேரா பெற்றுக்கொள்ளுதல்.



- தேசிய விளையாட்டு விழாவில் கபடி,கெரம் மற்றும் எல்லே தங்கப் பதக்கங்கள் மற்றும் வெண்கலப் பதக்கம் பெற்றுக்கொள்ளுதல்
- அதிக வருமானம் ஈட்டிய சமுர்த்தி வங்கிகளுக்கிடையில் மாவட்டத்தின் 42 வங்கிகளில் இரண்டாம் இடம் வடக்கு கொழும்பு சமுர்த்தி வங்கி மற்றும் மூன்றாவது இடம் மத்திய கொழும்பு 1 வங்கி பெற்றுக்கொள்ளுதல்.

ii திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகம்



- 10 கலைஞர்களுக்கு “கலாபிமானி “ விருது வழங்குதல்.
- நாளாந்தம் 1000 இற்கும் மேற்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களை வழங்குதல்.

- 2023 ஆம் ஆண்டில் ரூபா.மில் 23 ஆன அரசாங்க காணிகளில் வரி அறவிடும் இலக்குகளை கடந்து ரூபா.மில் 94 ஆன வரியினை அறிவடுதல்.
- தெமட்டகொட கிராம அலுவலர் பிரிவின் திரு அமேஷ் பனாபிட்டிய கொழும்பு மாவட்டம் மற்றும் மேல் மாகாணம் என்பவற்றில் 570 சமூக பாதுகாப்பு பயன்பெறுநர்களை இணைத்துக்கொண்டு முதலாவது இடத்தைக் கைப்பற்றுதல்



- தேசிய விளையாட்டுப் போட்டியில் மல்யுத்தம் மற்றும் நீச்சல் போட்டிகளில் தங்கம் மற்றும் வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் குறித்த விளையாட்டு வீரர்களை சர்வதேசப் போட்டிகளுக்கு அனுப்புதல்.
- விதாதா நிலையத்தால் அனுப்பி வைக்கப்பட்ட திம்பிரிகஸ்யாய பிரிவைச் சேர்ந்த திருமதி சம்பிகா சுதர்ஷனி, உணவு நீரிழப்புக்கான சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (GMP) தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுதல்.

iii கொலன்னாவ பிரதேச செயலகம்

- 2023 இலங்கையின் மெய் வல்லுநர் தடகள விளையாட்டு போட்டியில் முதல் 3 இடங்களையும் இரண்டாவது இடத்தினையும் பெறுதல்.



- 2023 மேல்மாகாண ஆளுநரின் வெற்றிக் கேடயம் பொருட்டான விளையாட்டு போட்டியில் கரம், பூப்பந்து மற்றும் எல்லே ஆகிய போட்டிகளில் 03 வெற்றிகளையும் குறுகிய தூர ஓட்டப் போட்டகளில் 04 வெற்றிகளைப் பதிவுசெய்தல்.

- வெல்லம்பிட்டிய ரணகாமி விளையாட்டு கழகத்தால் 47 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் எல்லே வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக்கொள்ளுதல்.
- தாபனப் பிரிவின் கீழ் இயங்கிய காணிப் பிரிவை, அலுவலக வளாகத்தில் புதிய அலுவலகமாக தாபித்தல்
- மாவட்ட சிறுவர் கழக விளையாட்டுப் போட்டியில் நாடகப் பிரிவில் முதலாவது இடத்தைக் கொலன்னாவ சனசமூக கழகம் தனதாக்கிகொள்ளுதல்.

iv ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேசச் செயலகம்

- மிரிஹான - ஜுபிலிகணுவ சந்தியை விரிவாக்கல் கருத்திட்டத்திற்கான நட்டஈடு செலுத்தும் பணிகள் 95% ஆல் முடிவுறுத்தல், பாதுகாப்பு அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களின் வதிவிட வசதிக்காக காணிகளை கைப்பற்றும் பணியை முற்றுமுழுதாக முடிவுறுத்தல் மற்றும் கிருளபனை – கொடகம வீதி விரிவாக்குவதற்காக காணி கையகப்படுத்தும் பணிகள் 80% ஆல் முடிவுறுத்தல்.



- நிண்டகால குத்தகை பொருட்டு வழங்கியுள்ள காணிகளில் நிலுவை அறவிடல் பணி 85% ஆல் முடிவுறுத்தல்.
- மிக வரையறுக்கப்பட்ட இட வசதியில் கடமைகளை நிறைவேற்றிய திட்டமிடல் பிரிவை, நவீனமயப்படுத்தி மனம்கவரும் வகையில் வடிவமைத்தல்.

v கடுவெல பிரதேச பிரதேசச் செயலகம்



- ஏறத்தாழ 80 ஏக்கர் தரிசு வயல்களில் அறுவடை செய்தல்.
- களனி ஆற்றின் கரையோரங்களில் வெள்ள அனர்த்த முகாமைத்துவத்திற்கான சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல்.
- விதாதா வள நிலையம் 40 தொழில்முனைவோரை உருவாக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதி சந்தைக்கு 4 தொழில்முனைவோர்களை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- அரசாங்கப் பணத்தை பயன்படுத்தாது மக்களின் அனுசரணையுடன், சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவால் செயற்படுத்திய அதிகூடிய நிதி பெறுமதியிலான திட்டமாக ரூபா.மில்லியன் 2.4பெறுமதியிலான 1000 புத்தக தொகுதிகளை மாணவர்களுக்கு வழங்குதல்.

vi மஹரகம பிரதேச செயலகம்

- குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்காக அலுவலக வளாகத்தில் உணவு வங்கியை தாபித்தல்.
- மொத்த பிரிவும் உள்ளடங்கும் வகையில் கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் தலைமைத்துவத்தில் தென்னை மரக்கன்றுகள் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சியினை நடைமுறைப்படுத்தல்.



- சமுர்த்தி வீடமைப்பு திட்டத்தின் கீழ் 07 சமுர்த்தி பயனாளி குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்தல்.

vii ஹோமாகம பிரதேச செயலகம்

- பிரிவில் 60 ஏக்கர் தரிசு நிலங்களில் நெல் அறுவடை செய்தல்
- 40 தொழில்முனைவோரை உருவாக்குதல்
- 08 கலைஞர்கள் மேல் மாகாண "விஸ்வாபிநந்தன"விருதுகளைப் பெற்றனர்.
- 2023 சமுர்த்தி சிறுவர் சங்கம், கலாச்சார மற்றும் இலக்கியப் போட்டித்தொடரில் கொழும்பு மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.
- 2023 புகைப்பிடுத்தலுக்கு எதிர்ப்பு தினக் கொடிகள் விற்பனையில் இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொள்ளுதல்.
- "2023 சமுர்த்தி பிரஜா ஹரசர" விழாவில் கொழும்பு மாவட்டத்தின் சிறந்த தொழில்முனைவோர் தெரிவுசெய்வதில் முதலாம் மற்றும் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொள்ளுதல்.
- மேல்மாகாணத்தின் கலைநிறுவனங்களுக்கிடையிலான போட்டித்தொடரில் 04 முதல் இடங்களைப் பெற்றுக்கொள்ளுதல்.

viii கெஸ்பேவ பிரதேச செயலகம்

- மாவட்டத்தில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டத்தில் அதிகூடிய பயனாளிகளைக் கொண்டிருத்தல்.
- மாவட்டத்தில் 42 சமுர்த்தி வங்கிகளுக்கிடையில் அதிக இலாபம் பெற்றுக்கொள்கின்ற வங்கியும், மேலும், 04 வங்கிகளை முதலாவது 18 வங்கிகளுக்கிடையில் கொண்டு வருதல். அத்துடன் வங்கி கழகங்களுக்கிடையில் அதிக இலாபம் பெறும் வங்கியாதல்.





- “2023 விஸ்கம் பிரபா” தையல் கைப்பணி கண்காட்சியில் 03 மாகாண வெற்றிகளையும் 03 மாவட்ட வெற்றிகளையும் பெற்றுக் கொள்ளுதல்.
- சிறந்த கிராம அபிவிருத்தி சங்கம் தெரிவு செய்யும் போட்டியில் மேல்மாகாணத்தின் மூனாறாவது இடத்தையும் கொழும்பு மாவட்டத்தில் முதலாவது மற்றும் இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொள்ளுதல்.

ix சீத்தாவக்கை பிரதேச செயலகம்



- கொட்டஹெர மலைப்பகுதியில் ஏற்பட்ட மண்சரிவினால் அதிக ஆபத்தை எதிர்நோக்கிய குடும்பங்களை மீள்குடியமர்த்துவதற்காக எல்ஸ்டன்வத்த காணியை கையகப்படுத்துதல்.
- புகைப்பிடித்தலுக்கு எதிரான கொடி தினம் பொருட்டு ரூபா. 840,682 ஐ உழைத்தல் மற்றும் மாவட்டத்தில் மூன்றாவது இடத்தைப் பெற்றுக்கொள்ளுதல்.
- பிரிவில் சிறுவர் கழகம், தேசிய மட்டத்தில் 29 வெற்றிகளை பெற்றுக் கொள்ளுதல்

x பாதுக்க பிரதேச செயலகம்



- பிரிவின் உணவு பாதுகாப்பு மற்றும் பொருளாதார விருத்திக்காக நிலைபேறுடன் கூடிய 480 வீட்டுத் தோட்டங்களை தாபித்தல்.
- தேசிய விளையாட்டு விழாவில் குத்துச் சண்டை மற்றும் வுஸு விளையாட்டுகளுக்கான 02 வெற்றிகளைப் பெற்றுக்கொள்ளுதல்.

- முறையற்ற வகையில் பாடசாலை செல்கின்ற 26 பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவைத்தல்.
- 136 வேலைவாய்ப்பு எதிர்பார்ப்பவர்களைத் தொழில்களின் பொருட்டு அனுப்பி வைத்தல்.



xi தெஹிவளை பிரதேச செயலகம்

- கொஹுவலையில் நிருமாணிக்கப்படுகின்ற புதிய மேம்பாலம் பொருட்டான காணி கையகப்படுத்தலின் முதலாவது கட்டம் பொருட்டு 50% ஆன நட்டஈடு செலுத்தி முடிவுறுத்தப்படுதல்.
- கடலோர வீதியின் இரண்டாவது கட்டத்தின் 90% ஐ வட்டியாக செலுத்தப்படுதல்.



- குறைந்த வருமானம் பெறுபவர்கள் மற்றும் பல்வேறு முறைகேடுகளுடன் பிரச்சினைகள் காணப்படும் குடும்பங்களின் பொருட்டு 14 வீடுகளை புனரமைத்து வழங்குதல்

xii இரத்மலானை பிரதேச செயலகம்

- X-Press pearl கப்பலின் தீ காரணமாக வாழ்வாதாரம் இழக்கப்பட்ட மீனவ மக்களுக்கு அதாவது 849 பயனாளி குடும்பங்களுக்கு 04 சந்தர்ப்பங்களில் ரூபா.மில்லியன் 130.8 ஆன நட்டஈடு வழங்குதல்.
- பிரதேச செயலகப் பிரிவில் காணி குத்தகை அறவிடலாக தேறிய வருமானம் ரூபா.35,683,300.54 ஐ பெற்றுக்கொள்ளுதல்.

xiii மொரட்டுவ பிரதேச செயலகம்



- மேல் மாகாணம் மற்றும் கொழும்பு மாவட்டத்தில் சிறந்த இளைஞர் சேவை அலுவலராக சஞ்ஜீவ பிரதீப் அவர்கள் தெரிவாதல்.



- மொத்த நாட்டிலும் 300 பேர்களுக்கிடையில் கொழும்பு மாவட்டத்தின் ஒரே மூலிகை அழகு சாதன பொருட்களை உற்பத்தி செய்கின்ற தொழில்முனைபவராக தங்க விருது, மொறட்டுவையில் வசிக்கும் திருமதி சாரா நியோ பெற்றுக்கொள்ளுதல்.

1.5.5. பிரதேச செயலகங்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

i. கொழும்பு பிரதேச செயலகம்

- அதிக எண்ணிக்கையிலான மக்கள், பிறப்புச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்கு நாளாந்தம் வருகை தருவதுடன், திருப்பதிகரமான சேவை வழங்குதற்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை பூர்த்தி செய்து கொள்ளவேண்டிய நிலை காணப்படுதல்.
- சமூக சேவைப் பிரிவில், சேவைகளைப் பெறுவதற்கு நாளாந்தம் வருகை தரும் மக்களுக்கு திருப்திகரமான சேவை வழங்குவதற்கு தேவையான இட வசதி பூர்த்தி செய்யது கொள்ள வேண்டிய நிலை காணப்படுதல்.
- பிரிவில் அதிகமாக வாழ்கின்ற தமிழ் மொழியை தாய்மொழியாக பயன்படுத்தும் மக்களுடன் தொடர்பாடல்களை மேற்கொண்டு தேவைகள நிறைவேற்றுவதற்கு, போதியளவில் தமிழ் மொழி தேர்ச்சியுள்ள அலுவலர்களை இணைத்துக் கொள்ள வேண்டிய நிலை காணப்படுதல்.

- அலுவலக நடவடிக்கைகளை திறம்பட நிறைவேற்றுவதற்கு, காணப்படும் வரையறுக்கப்பட்ட இடவசதியினை பயனுள்ளவாறு பயன்படுத்தல்.

ii திம்பிரிகசாய பிரதேச செயலகம்

- சேவை பெறுநர்கள் அதிகமான எண்ணிக்கையினருக்கு பிறப்புச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய நிலை ஏற்படுதல்.
- அலுவலக நடவடிக்கைகளை திறம்பட நிறைவேற்றுவதற்கு, தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய நிலை ஏற்படுதல்.
- நகர்ப்புறம் மற்றும் அதிக மக்கள் தொகை கொண்ட பிரிவாக காணப்படுவதால், நலன்புரி சேவைகளின்போது பிரச்சனைகள் குறைவடையும் வகையில் பயனாளிகளைத் தெரிவு செய்ய வேண்டிய நிலை ஏற்படுதல்.
- அரச ஒதுக்கீடுகள் வரையறுக்கப்பட்டு கிடைக்கப்பெறும் சந்தர்ப்பங்களில் பொது மக்களுக்கு தேவையான அபிவிருத்தி கருத்திட்டங்களை நடை முறைப்படுத்துவதற்கு நிதி பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுதல்.

iii. கொலன்னாவ பிரதேச செயலகம்

- வெள்ள அனர்த்தங்களால் இடம்பெயர்ந்த மக்களுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களைத் தெடர்புபடுத்திக் கொண்டு நிவாரணம் வழங்குதல்.
- அலுவலக நடவடிக்கைகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்கு தேவையான வரையறுக்கப்பட்ட இடவதிகளை பயனுள்ளவாறு பயன்படுத்தல்.

- அலுவலக நடவடிக்கைகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்கு, தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை பூர்த்தி செய்துக் கொள்ளுதல்.

iv ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகம்

- அலுவலக நடவடிக்கைகளை இற்றைப்படுத்துவதற்கான மென்பொருள்களுடன் கூடிய தரவு முறைமை தயாரித்தல் மற்றும் தொடர்ச்சியாக இணையதள வசதிகளை வழங்குதல்
- அலுவலக நடவடிக்கைகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு தேவையான கணினி மற்றும் டெப் போன்ற தொழில்நுட்ப கருவிகள் அடங்கலாக பௌதீக வளங்களை பூர்த்தி செய்து கொள்ளுதல்.
- அரசு ஒதுக்கீட்டின் ஒதுக்கீடுகள் குறைவாக இருப்பதால், தகவல் தொழில்நுட்பம் மற்றும் புதிய மென்பொருள் பயன்பாடு குறித்து, மேம்படுத்தப்பட்ட அறிவை வழங்க அலுவலக மற்றும் கள அலுவலர்களுக்கு பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல்.

v கடுவெல பிரதேச செயலகம்

- பிரிவில் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு வீடமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்.
- பிரிவில் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வருமானம் அதிகரிப்பதற்காக உற்பத்தித் துறைகளில் ஈடுபடுத்தல்.
- சிறுவர் உரிமைகளை ஊக்குவித்தல் மற்றும் இளம் சமுதாயம் எதிர்கொள்ளும் சமூக பிரச்சனைகளை நிவர்த்தி செய்தல்.

vi மஹரகம பிரதேச செயலகம்

- வெளிக் களங்களில் பணிபுரியும் கிராம அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி அலுவலர்கள் ஆகியோருக்கு போதியளவு இடவசதி வழங்க வேண்டி ஏற்படுதல்.
- வெற்றிடமாக உள்ள 06 கிராம அலுவலர் பிரிவுகளில் பதில் கடமையாற்றுவதற்காக அலுவலர்களை ஈடுபடுத்துவதால், குறித்த பிரிவுகளிலும் வினைத்திறனுடன் கூடிய சேவை வழங்க வேண்டிய நிலை ஏற்படுதல்.
- நிர்வாக அலுவலர் பதவி வெற்றிடமாக உள்ளதால், வேறு அலுவலர்களை பொருத்தமான வகையில் சேவையில் ஈடுபடுத்தி கடமைகளை நிறைவேற்றுதல்.
- விரைவான இணையத்தள வசதிகளுக்கு தேவையான வியாபாரப் பெயர் பதிவு நடவடிக்கைகள், பதிவாளர் துறையின் செயல்பாடுகள் மற்றும் அனுமதிப் பத்திரம் வழங்கும் பிரிவில் நடவடிக்கைகள் என்பன தொடர்பில் வசதிகள் இல்லாத போதும் திறம்பட நிறைவேற்றுதல்.

vii . ஹோமாகம பிரதேச செயலகம்

- தற்போதைய பொருளாதார பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டு வேலை இழந்துள்ள மக்களுக்கு வாழ்வாதார வழிகளை வகுத்தல்.
- போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களின் மறுவாழ்வு மற்றும் அவர்களது குடும்பங்களின் பொருளாதாரம் மேம்படுத்தல்.
- புதிய அலுவலக வளாகத்திற்கு தேவையான அலுவலக உபகரணங்களைத் தற்போது காணப்படும் ஒதுக்கீட்டு வரம்புகளுக்குள் ஏற்பாடு செய்துகொள்ளுதல்.

viii கெஸ்பாவ பிரதேச செயலகம்

- தற்போதுள்ள வரையறுக்கப்பட்ட மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்துக்கொண்டு புதிய தொழில்நுட்பம் மற்றும் இற்றைப்படுத்திய மென்பொருளுடன் தரவு முறைமை தயாரித்தல்.
- அலுவலக நடவடிக்கைகளைத் வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு தேவையான கணினி மற்றும் டெப் போன்ற தொழில்நுட்ப கருவிகள் அடங்கலாக பௌதீக வளங்களைப் பூர்த்தி செய்து கொள்ளுதல்.
- அரசு ஒதுக்கீட்டின் ஒதுக்கீடுகள் குறைவாக இருப்பதால், தகவல் தொழில்நுட்பம் மற்றும் புதிய மென்பொருளின் பயன்பாடு குறித்து மேம்படுத்தப்பட்ட அறிவை வழங்க அலுவலக மற்றும் கள அலுவலர்களுக்கு பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல்.

ix சீத்தாவக்க /பாதுக்க பிரதேச செயலகம்

- அலுவலகங்கள் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளின் அலுவலர்களது கடமை அலுவல்களை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கு தேவையான கணினி வசதிகள் அடங்கலாக பௌதீக வளங்களை பூர்த்தி செய்து கொள்ளுதல்.
- அரசாங்கத்தின் ஒதுக்கீடுகள் வரையறுக்கப்பட்டு கிடைக்கின்ற போதிலும், பொதுமக்களுக்கு அத்தியாவசிய அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நிதி பெற்றுக்கொள்ளுதல்.

x பிரதேச செயலகம், தெஹிவளை

- தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டின்போது LGN கட்டமைப்பில் காணப்படும் மந்தகதி காரணமாக ஏற்படும் தொழில்நுட்ப

பிரச்சினைகளை முகாமைத்துவம் செய்துக்கொண்டு பொது மக்களுக்கு வினைத்திறனுடன் கூடிய சேவை வழங்குதல்.

- அலுவலகத்தில் காணப்படும் வரையறுக்கப்பட்ட இடவசதியினை முகாமைத்துவம் செய்துக்கொண்டு அலுவலகத்தின் அலுவலர்களுக்கு வசதிகளை அளித்தல் மற்றும் சேவைபெறுநர்களுக்கு வினைத்திறனுடன் கூடிய சேவை வழங்குதல்.

xi இரத்மலானை பிரதேச செயலகம்

- அலுவலக நடவடிக்கைகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு தேவையான கணினி கருவிகள் அடங்கலாக பௌதீக வளங்களைப் பூர்த்தி செய்து கொள்ளுதல்.

- அரசு ஒதுக்கீட்டின் ஒதுக்கீடுகள் குறைவாக இருப்பதால், தகவல் தொழில்நுட்பம் மற்றும் புதிய மென்பொருளின் பயன்பாடு குறித்து, மேம்படுத்தப்பட்ட அறிவை வழங்குவதற்காக அலுவலக மற்றும் கள அலுவலர்களுக்கு பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல்.
- அலுவலகத்தில் காணப்படும் வரையறுக்கப்பட்ட இடவசதியை முகாமைத்துவம், அலுவலகத்தின் அலுவலர்களுக்கு வசதிகளை அளித்தல் மற்றும் சேவைபெறுநர்களுக்கு வினைதிறனுடன் கூடிய சேவை வழங்குதல்.
- அலுவலகத்தில் காணப்படும் வரையறுக்கப்பட்ட இடவசதிகளை முகாமைத்துவம் செய்துக்கொண்டு அலுவலகத்தின் அலுவலர்களுக்கு வசதிகளை அளித்தல் மற்றும் சேவைபெறுநர்களுக்கு வினைத்திறனுடன் கூடிய சேவை வழங்குதல்.

xii மொரட்டுவ பிரதேச செயலகம்

- அலுவலக நடவடிக்கைகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு, தற்போது காணப்படும் இடவசதிகளை பயனுள்ளவாறு பயன்படுத்தல்.

- அலுவலக நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்களை பூர்த்தி செய்துகொள்ளுதல்.
- கிராம அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கு போதுமான அளவில் அலுவலக வசதிகளை வழங்குதல்
- அரசு ஒதுக்கீட்டின் ஒதுக்கீடுகள் குறைவாக இருப்பதால் அலுவலக மற்றும் கள அலுவலர்களுக்கு பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல்.

1.5.6 பிரதேச செயலகங்களின் எதிர்கால இலக்குகள்

i. கொழும்பு பிரதேச செயலகம்

- பிரிவில் செங்குத்து மற்றும் கிடைமட்ட இடைவெளியில் நகர்ப்புற தோட்டங்களைத் தொடங்குதல். தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்க 240 பயனாளிகள் - 12 நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- பிரிவின் 4700 சிரேஷ்ட பிரசைகளுக்கு சமூக, பொருளாதார மற்றும் உளநல நலன்புரித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- பிரிவில் உடைந்து நிலையில் காணப்படும் 50 பொதுக் கழிவறை அமைப்புகளைப் புனரமைத்தல்.
- பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் உடைந்து காணப்படும் 08 வீடுகளைப் புனரமைத்தல்.
- பிரிவில் வேலை வாய்ப்புகளை எதிர்பார்க்கும் 500 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.
- பிரிவின் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கக்கூடிய 2 இடங்களில் 10 வர்த்தக வாய்ப்புகளை மேம்படுத்தல்.
- 30 சுற்றுலா போக்குவரத்து வாடகை வண்டி ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் தொலைபேசி அழைப்புகள் மூலம் போக்குவரத்து வசதிகளுக்கு வழிவகுத்தல்.

ii திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகம்

- பொதுமக்களுக்கு அதிகபட்ச சேவையை வழங்கி மாவட்ட அபிவிருத்தியில் முதன்மையான பிரிவாக மாற்றுதல்.
- நகர்ப்புற தோட்டக்கலை தொடங்குதல். 250 பயனாளிகள் - 20 நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- பாடசாலை விட்டுச் செல்கின்ற 10 பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்த்தல்.
- வேலை வாய்ப்பற்ற 550 இளைஞர் யுவதிகளுக்கு தொழில்சார் வழிகாட்டல்களை மேற்கொண்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபடுத்தல்
- 20 முச்சக்கரவண்டி சாரதிகள், இலத்திரனியல் சாதனங்கள், பிளம்பர்கள், முடி திருத்துபவர்கள், தச்சர்கள் மற்றும் வர்ணம் தீட்டுபவர்களுக்கு NVQ நிலை சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்
- பிரிவின் 50 விளையாட்டு வீரர், வீராங்கனைகளை தேசிய மற்றும் சர்வதேச சாதனைகள் வரை கொண்டுச் செல்லுதல்
- மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும், பிரதேசத்தின் உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கும், பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டங்களை திறம்படவும் வெற்றிகரமாகவும் முன்னெடுத்தல்.

iii கொலன்னாவ பிரதேச செயலகம்

- பிரதேச மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதன் மூலம் வலுவூட்டப்பட்ட சமூகத்தை உருவாக்குதல்.
- பிரதேசத்தின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை திறம்பட மற்றும் வெற்றிகரமாக முன்னெடுத்து மக்களின் வாழ்வாதாரத்தையும் பிரதேசத்தின் உட்கட்டமைப்புகளையும் அபிவிருத்தி செய்வதன் மூலம் பொதுமக்களுக்கு அதிகபட்ச சேவையை வழங்குதல்.

iv ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகம்

- அஸ்வெசும 02 ஆவது கட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றுதல்
- உணவுப் பாதுகாப்பற்ற 200 குடும்பங்களின் வாழ்க்கையைத் தக்கவைப்பதற்காக, உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதி செய்தல்.
- 30 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கு சந்தை வாய்ப்புகளை உருவாக்குதல்.
- பல்வேறு நிதி ஆதாரங்களில் இருந்து பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட திட்டங்களை வெற்றிகரமாக முடித்தல்.
- சமுர்த்தி வலுவூட்டல் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் 343 குடும்பங்களை வலுவூட்டல்

v கடுவெல பிரதேச செயலகம்

- பிரிவில் சுயதொழில் செய்பவர்களின் உற்பத்திகளுக்காக ஏற்றுமதிமதி வாய்ப்புகளை மேம்படுத்தல்
- தரிசு நிலங்களை உற்பத்தி நோக்கங்களுக்காகப் பயன்படுத்துதல் மற்றும் பிரிவின் நிலத்தினை நிலையானதும் பயனுள்ளதுமான வகையில் விவசாய மற்றும் தொழில்நுட்ப உற்பத்திகளுக்காக பயன்படுத்துதல்.
- பிரிவில் திரவ பால் உற்பத்தியை அதிகரித்தல்
- பிரதேசத்தில் சிறிய நீர்ப்பாசன முறைமையை புனரமைத்தல்.
- பிரிவில் போதைப்பொருள் பாவனையைக் குறைப்பதற்கும் போதைக்கு அடிமையானவர்கள் அதிலிருந்து மீள்வதற்கும் முழு ஆலோசனைப் பங்கேற்பை வழங்குதல்.
- களனி கங்கை, ஏரிகள் மற்றும் நீர்நிலைகளில் மீன் உற்பத்தியை அதிகரித்தல்
- பிரிவில் கரிம உரங்களின் தேவையைப் பூர்த்தி செய்தல்

- இலவச சுகாதார மருத்துவமனை வசதிகளை மேம்படுத்தி, சிறந்த சுகாதார ஆலோசனைகளை கடைபிடிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குவதன் ஊடாக, தொற்றாத நோய்களை கட்டுப்படுத்துவதற்குப் பணியாற்றுதல்
- மனநலத்தை மேம்படுத்துதல் மற்றும் பிரிவின் சிரேஷ்ட பிரசைகளின் நலனை மேம்படுத்துதல்.

vi மஹரகம பிரதேச செயலகம்

- புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி, கிடைக்கக்கூடிய மனித மற்றும் பௌதீக வளங்களை திறம்பட நிர்வகித்தல், பிரதேச மக்களுக்கு விரிவான சேவையை வழங்குதல்
- "புதிய கிராமம் – புதிய நாடு" தேசிய ஒருங்கிணைந்த பங்களிப்பு அபிவிருத்தி அணுகுமுறை ஊடாக பிரிவின் மக்களை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் வலுவூட்டுதல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உருவாக்குதல்.
- பல்வேறு நிதி மூலங்களைக்கொண்டு பிரிவிற்கான கருத்திட்டங்களை வெற்றிகரமாக முடிவுறுத்தல்.

vii ஹோமாகம பிரதேச செயலகம்

- புதிய அலுவலக வளாகத்தில் அலுவலக நடவடிக்கைகளை தொடங்குதல்.
- சிறு நீர்ப்பாசன கட்டமைப்புகளின் மறுசீரமைப்பு.
- 70 ஏக்கர் தரிசு வயல்களை பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தல்.
- சுயதொழில் செய்பவர்களின் பொருட்களை விற்பனை செய்வதற்காக வசதிகளை வழங்குதல்.

viii கெஸ்பேவ பிரதேச செயலகம்

- பல்வேறு நிதி ஆதாரங்களில் இருந்து பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட திட்டங்களை வெற்றிகரமாக முடித்தல்.

- அஸ்வெசும கட்டம் 02 ஐ வெற்றிகரமாக முடித்தல்
- உணவு பற்றாக்குறை காரணமாக 365 குடும்பங்களின் வாழ்க்கையை பராமரிப்பதற்கு தேவையான உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதி செய்தல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான புதிய தொழில்முனைவோர் உட்பட 40 தொழில்முனைவோருக்கு சந்தை வாய்ப்புகளை உருவாக்குதல்.
- பாடசாலை விட்டுச்சென்ற 80 இளைஞர் யுவதிகளுக்கு தொழில்சார் பயிற்சி கற்கைநெறிகளுக்கான தேர்ச்சியினை வழங்குதல்.

ix சீத்தாவக்க பிரதேச செயலகம்

- பிரதேச செயலகத்திற்கு திட்டமிடப்பட்டுள்ள மேலதிக கட்டிடத்தை பிரிவின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பின்தங்கிய மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துதல்.
- பல்வேறு நிதி ஆதாரங்களில் இருந்து பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட திட்டங்களை வெற்றிகரமாக முடித்தல்.
- சீத்தாவக்க நிர்மாணிப்பதற்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உதவிகளைப் பெறுதல்.

x பாதுக்க பிரதேச செயலகம்

- பல்வேறு நிதி ஆதாரங்களில் இருந்து பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட திட்டங்களை வெற்றிகரமாக முடித்தல்.
- வக என்ற மேற்கு பிரிவின் இளைஞர் விவசாய தொழில் முனைவோர் கிராமத்தை தாபித்தல்
- அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் நடமாடும் சேவைகளை நடாத்தல்

xi தெகிவளை பிரதேச செயலகம்

- பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு பொது மக்கள் பிரதிநிதிகளின் ஆதரவுடன் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துதல். கடலோர வீதிகளில் மூன்றாவது கட்டம் (தெகிவளை புகையிரத நிலையம் அருகாமையிலிருந்து ஓபன் பிரதேசம் வரை) நிருமாணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுத்தல்
- கரையோர வீதியின் மூன்றாம் கட்டத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்தல் (தெஹிவளை புகையிரத நிலையத்திற்கு அருகில் இருந்து ஓபன் பிளேஸ் வரை).
- பிரதேச செயலகத்திற்கு திட்டமிடப்பட்டுள்ள புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஆதரவைப் பெறுதல்.
- தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் பங்கேற்பதன் மூலம் சேவைகளின் தரத்தை உறுதி செய்தல்.
- கொஹுவல மெல்டர் பிளேஸில் நடைபாதையை நிருமாணித்தல்
- தெஹிவளை அங்காடி தொகுதி நிருமாணிப்பதற்காக காணி சுவீகரிப்புகளின் பொருட்டு கொடுப்பனவுகளை செய்தல்.
- கொஹுவல புதிய மேம்பாலத்தின் வேலைகளை முடிவுறுத்தல்.
- பல்வேறு நிதி ஆதாரங்களில் இருந்து பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட திட்டங்களை வெற்றிகரமாக முடித்தல்.

xii இரத்மலானை பிரதேச செயலகம்

- உணவுப் பற்றாக்குறையால் அவதியுறும் 400 குடும்பங்களின் வாழ்வாதாரத்தைப் பேணுவதற்கு உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதி செய்தல். மத்திய அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் மேல் மாகாண சபையின் கீழ், பிரிவிற்கு கிடைக்கப்பெறும் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்தல்.

- பொருளாதார ரீதியில் சிரமங்களை எதிர்நொக்கும் 163 குடும்பங்கள் பொருட்டு 12.9 மில்லியன் தொகையில் நிதி உதவி வழங்குதல்
- 100 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரின் வருமானத்தை அதிகரிப்பதற்காக 10 தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தி அவர்களுக்கு சந்தை வாய்ப்புகளை அறிமுகப்படுத்துதல்.
- பல்வேறு நிதி ஆதாரங்களில் இருந்து பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட திட்டங்களை வெற்றிகரமாக முடிவுறுத்தல்.

xiii மொரட்டுவ பிரதேச செயலகம்

- புதிய தொழில்முனைவோரை உருவாக்குதல் மற்றும் இரண்டு தொழில்முனைவோரை ஏற்றுமதி செயல்முறையில் இணைத்தல்
- குறைந்த எடை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு போன்ற குறைபாடுகளைக் கொண்ட 0 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு திட்டங்களை நடத்துதல்.
- போதைப்பொருள் மற்றும் பல்வேறு ஊழல் செயற்பாடுகளிலிருந்து குழந்தைகளை விடுவித்து பாடசாலை செல்லும் வயதுள்ள குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படுதல்.
- தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை மேம்படுத்துவதன் மூலம் குழந்தைகள், பெற்றோர்கள், ஒற்றைப் பெற்றோர்கள் மற்றும் முதியவர்கள் போன்ற பல்வேறு குழுக்களின் நலனை மேம்படுத்துதல்.
- புதிய வருமான ஆதாரங்களை உருவாக்குவதற்கு, புதிய தொழில்களை தொடங்குவதற்கு அரச அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல்.

2 ஆம் அத்தியாயம்

முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு

பின்வரும் துறைகளின் கீழ் மாவட்ட செயலகத்தால் எட்டப்பட்ட விசேட சாதனைகள், பல்வேறு விடய துறைகளுக்கு ஏற்புடையதாக பணிகளை நிறைவேற்றும் போது எதிர்நோக்கிய சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள் ஆகியன இவ் அத்தியாயத்தில் குறிப்பிடப்படுகின்றன.

- நிறுவன, நிர்வாக மற்றும் நிதியிடல்
- பொருளாதார உட்கட்டமைப்பு மேம்பாடு
- உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து
- தொழில்முயற்சி அபிவிருத்தி
- மனித வள மேம்பாடு
- நுகர்வோர் பாதுகாப்பு
- சமூக பாதுகாப்பு
- சிறுவர்கள் மற்றும் மகளிர் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு
- சமூக வளர்ச்சி
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பயனுள்ள நிலப் பயன்பாடு
- மத மற்றும் கலாச்சார

2.1 சிறப்பு சாதனைகள்

2.1.1 பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு

- சனத்தொகை மற்றும் வீடமைப்பு கணக்கெடுப்பு 2024 ஐ பட்டியலிடல் மற்றும் கணக்கெடுப்பு நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டு கொழும்பு மாவட்டத்தில் கணக்கெடுப்பு தொகுதிகளின்படி அனைத்து கட்டிட அலகுகள் மற்றும் நபர்களை அடையாளம் காணுதல்.
- ஆண்டுக்கு ஏற்புடையதாக கொழும்பு மாவட்டத்தில் தொழில்படை ஆய்வு மாதிரிகள் 244, நெல் அறுவடை ஆய்வு மாதிரிகள் 123 மற்றும்

வருடாந்த கைத்தொழில் ஆய்வுக்காக 304 ஆய்வுகளை வெற்றிகரமாக நடாத்துதல்.

2.1.2 உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து

- சோஜான் முறையின் கீழ் நெல் பயிரிட முடியாத 1.5 தரிசு வயல்களை மரக்கறி செய்கைக்கு பயன்படுத்தல்.
- உள்ளூர் கொடிக் கிழங்கு அறுவடையின் கீழ் பயிர்ச் செய்கை மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உள்நாட்டு கிழங்கு சார்ந்த உற்பத்தி மேம்பாடுகளின் கீழ் 06 ஏக்கர் நிலத்தில் "ராஜ அல" என்ற கிழங்கு வகையினை விஸ்தரித்தல்.

2.1.3 தொழில்முயற்சிகளின் மேம்பாடு

- சமுர்த்தி வங்கி திட்டத்தின் கீழ், சமுர்த்தி வங்கி மூலம் 14,234 பேருக்கு ரூபா. 1,465,754,989 கடன் தொகை வழங்குதல்.
- சந்தை, மற்றும் கண்காட்சிகளை நடாத்துவதன் மூலம் கொழும்பு மாவட்ட தொழில்முனைவோர்கள் ரூபா. 24.67 மில்லியன் வருமானம் உழைத்துக்கொள்ளுதல் மற்றும் அதன் மூலம் ரூபா.3.41 ஆன புதிய விற்பனைக்கான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளுதல்.
- 2418 தொழில்முனைவோருக்கு குழு தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதன் மூலம், தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்கு இயன்றமை மற்றும் 65 தொழில்முனைவோருக்கு வெளியக நிறுவனங்கள் ஊடாக புதிய தொழில்நுட்ப அறிவை ஒருங்கிணைத்தல்.
- வாடிக்கையாளர்களுக்கு தரமான தயாரிப்புகளை வழங்கும் நோக்கத்துடன் 28 தயாரிப்புகளுக்கு தரநிலை மற்றும் தரச் சான்றிதழ்களை வழங்குதல்.
- 400 தொழில்முனைவோருக்கு சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குதல்.

- தொழில்முனைவோருக்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த இணைய சந்தைப்படுத்தல் அணுகுமுறையைத் தொடங்குதல்.

2.1.4 மனித வள மேம்பாடு

- நேரடி வேலைவாய்ப்புக்காக 326 வேலை வாய்ப்பு ஆர்வலர்களை ஈடுபடுத்தல்
- மாவட்ட வேலைவாய்ப்புத் சந்தை மூலம் 58 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குதல்
- RPL முறையின் கீழ் திறன் சான்றிதழ்களை வழங்குவதற்காக 55 நபர்களை வழிநடாத்துதல் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு அவர்களை ஊக்குவித்தல்
- 382 கைவினைஞர்களுக்கு தேசிய தொழில் தகுதி (NVQ) சான்றிதழ்களை முன் அறிவு மதிப்பீட்டின் மூலம் (RPL) பெறுவதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுதல்

2.1.5 நுகர்வோர் பாதுகாப்பு

- 2022 ஆம் ஆண்டிலும் பார்க்க பிரதேச செயலக மட்டத்தில் எடை மற்றும் அளவிடும் உபகரணங்களை சரிபார்ப்பது குறித்து வர்த்தகர்களின் விழிப்புணர்வை 44% ஆல் அதிகரித்தல்.
- 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது வருடாந்திர எடை மற்றும் அளவீட்டு சரிபார்ப்பு வருமானம் 43% ஆல் அதிகரித்தல்.
- பொருளாதார நெருக்கடி காரணமாக வெடிமருந்து பொருட்களை இறக்குமதி செய்வதில் கட்டுப்பாடுகள் காணப்பட்ட போதிலும், 231 வெடிமருந்து பொருட்களின் அனுமதிப் பத்திரங்களும், 49 அனுமதிப் பத்திரங்களுக்கும் சமவிகிதமாக விநியோகம் செய்யப்பட்டதால், கைத்தொழில்கள் மற்றும் சேவைகளைத் தொடர்ச்சியாக பராமரித்தல்

- நுகர்வோர் விவகாரப் பிரிவு மூலம் 1483 சந்தை சுற்றி வளைப்புகளும் ஆய்வுகளையும் நடாத்தி ரூபா. 37.91 அபராதம் அரச வருமானத்தில் சேர்க்கப்படுதல்.

2.1.6 சமூகப் பாதுகாப்பு

- கொழும்பு மாவட்டத்தில் அஸ்வெசும பயனாளிகளின் நிகழ்ச்சித்திட்டத்தில் முதலாவது கட்டம் உரிய காலப்பகுதிக்குள் வெற்றிகரமாக முடிவுறுத்தல்.
- நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியிலும், சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டத்தின் பொருட்டு 816 நபர்களை உறுப்பினராக்குதல்.

2.1.7 சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்பு அபிவிருத்தி

- அரசாங்கத்தின் ஒதுக்கீடுகளின்றி கள அலுவலர்களின் ஒத்துழைப்புடன் பாலர் பாடசாலைகளில் 582 வீட்டுத் தோட்டங்களை உருவாக்குதல்.
- 1929 சிறுவர்கள் உபகாரச் சேவைக்கு கிடைக்கப்பெற்ற புகார்களின் விசாரணைக்குப் பின்னர் 180 சிறுவர்களை மீண்டும் சமூகமயப்படுத்தல்
- 153 பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டல்.
- இரத்மலானை பிரதேச செயலகத்தின் சுயதொழில் தயாரிப்பு விற்பனை நிலையத்தின் ஊடாக 32 பெண் தொழில்முனைவோருக்கு சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்கி அவர்களின் மாதாந்த வருமானத்தை அதிகரித்தல்.
- உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 400 மகளிர் அமைப்பு உறுப்பினர்களின் வீட்டுத் தோட்டங்களை உருவாக்குதல், அதன் மூலம் நச்சுத்தன்மையற்ற ஊட்டச்சத்து உணவின் நுகர்வை அதிகரித்தல்.

2.1.8 சமூக அபிவிருத்தி

- சமுர்த்தி சமூக அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டத்தின் விசேட வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடற்ற 74 சமுர்த்தி பயனாளிகளுக்கு வாழக்கூடிய வகையில் வீடுகளை நிர்மாணித்து வழங்குதல்
- 2023 ஆம் ஆண்டில் சமுர்த்தி சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1,842 பயனாளிகளுக்கு ரூபா. மில்லியன் 33 ஆன தொகை புலமைப் பரிசீலாக வழங்கியதன் மூலம் சமுர்த்தி பயனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் உயர் கல்விக்கு உதவியாக அமைதல்.
- குறைந்த அபிவிருத்தி காணப்படும் விகாரை நிலையங்கள், குறைந்த அபிவிருத்தி காணப்படும் அறநெறி பாடசாலைகள் மற்றும் இடர்களுக்கு உள்ளாகிய 06 விகாரை நிலையங்களை அபிவிருத்தி செய்தல்.
- 13 பிரதேச செயலகப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி நடனத்தில் திறமைகளை வெளிப்படுத்தும் 16 மாற்றுத்திறனாளி சிறுவர்களைக் கொண்ட கொழும்பு மாவட்டச் செயலகத்தின் "சுலலித" விசேட சிறுவர் நடனக் குழுவை உருவாக்தைல்.
- மாற்றுத்திறனாளிகளுக்கான நபர்களின் "சுயசக்தி" நிறுவன மதிப்பீட்டுத் நிகழ்ச்சிதிட்டத்தில் முதல் இடத்தைப் பெற்ற பத்து பேர் 2023 ஆம் ஆண்டில் தேசியப் போட்டிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டு ஒரு தேசிய அளவிலான வெற்றியைப் பெற்றுக்கொள்ளுதல்.
- வேலைவாய்ப்புக்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ள 18-35 வயதுக்கு இடைப்பட்ட 15 இளைஞர் யுவதிகளுக்கு தனியார் துறையில் நிரந்தர நியமனம் வழங்குதல்.
- அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட 695 வீடுகள், சிறு மற்றும் நடுத்தர வியாபார நிலையங்களை உரிய வகையில் புனரமைக்கப்பட்டு முடிவுறுத்தல்.
- 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மத்தியஸ்த்த சபை விசேட வகைகளின் பிணக்குச் சட்டத்தின் கீழ், காணி பிணக்குகளை தீர்ப்பதற்காக

கொழும்பு மாவட்டத்திற்கு விசேட காணி மத்தியஸ்த்த மூலச் சபையை நிறுவுதல்.

2.1.9 சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பயனுள்ள காணி பயன்பாடு

- பிரதேச செயலக மட்டத்தில் 703 நீர் ஆதாரங்களை அடையாளம் காணுதல்.
- தேசிய நிலப் பயன்பாட்டுக் கணக்கெடுப்பின் கீழ் கொழும்பு மாவட்டத்தை உள்ளடக்கிய 36 வரைபடங்களை 1:50,000 அளவு திட்டத்தில் இற்றைப்படுத்தி முடிவுறுத்தல்.
- "புதிய கிராமம் புதிய நாடு" (අලුත් කමක් අලුත් රට්ටක්) வேலைத்திட்டத்தில், மர நடுகையின் கீழ் 786 மரக்கன்றுகள் பிரதேச செயலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டதுடன், அதன் முதல் கட்டமாக கொமர்ஷல் வங்கியின் அனுசரணையில் பெல்லன்வில, அத்திடிய சரணாலயத்தில் 500 மரக்கன்றுகள் நடுதல்.

2.1.10 சமய மற்றும் கலாச்சார நடவடிக்கைகள்

- மாவட்டத்தின் நடன குழுக்களை தாபித்தல்

2.2 சவால்கள்

2.2.1 நிறுவனம், நிர்வாகம் மற்றும் நிதியிடல்

- பொருளாதார நெருக்கடி காரணமாக கிடைக்கப்பெறும் ஒதுக்கீடுகள் வரையறுக்கப்படுவதனை கவனத்தில் கொண்டு செயற்படுதல்.
- அலுவலர்கள் உள்நாடு மற்றும் வெளிநாட்டு லீவு பெற்றுக்கொள்வதால் பிரிவில் போதியளவு அலுவலர்கள் இல்லாவிடினும், பிரச்சினைகளுடன் கூடிய சூழல்கள் குறையும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- கட்டிட நிர்மாணப் பொருட்களின் விலை வேகமாக அதிகரித்து வருவதால், ஹோமாகம பிரதேச செயலகத்தின் புதிய கட்டிட நிர்மாண

வேலைத்திட்டம் மதிப்பிடப்பட்ட செலவில் மேற்கொள்வதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், புதிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையன் அனுமதிக்கு சமர்ப்பித்தல்.

- பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவி ஏறத்தாழ 08 மாதங்களாக வெற்றிடமாக இருந்த போதிலும், அனைத்து கணக்காய்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்துதல்.
- பொறியியல் பிரிவில் வரைப்டவியலாளர் மற்றும் மின்தொழில்நுட்பவியலாளர் இடமாற்றம் பெற்றுள்ளதால், குறித்த பணிகள் மந்தகதியில் செயற்பட்டாலும், உரிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- பிரிவு மட்டத்தில் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களின் வெற்றிடங்கள் நிலவிய போதிலும், குறித்த பணிகளை மேற்கொள்ளுதல்.
- தொழில்நுட்ப உபகரணங்களின் பற்றாக்குறை காணப்பட்ட போதிலும் அலுவலக பணிகளை மேறகொள்ள வேண்டி ஏற்படுதல்.

2.2.2 பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்

- கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் கணக்கெடுப்பு செயற்பாடுகளிலிருந்து நீங்கினாலும், சனத் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் ஆய்வு நடவடிக்கைகள், பட்டியலிடல் மற்றும் இற்றைப்படுத்தல் ஆகிய பணிகள் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

2.2.3 உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து

- சோஜான் முறையின் கீழ் தரிசு வயல்களை பயிரிடுவதற்காக 05 ஏக்கர்களை இலக்காகக் கொணட போதிலும், தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் வயல் நிலங்களுக்கு கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெறாமை மற்றும் அரசாங்கத்தின்

பங்களிப்பு அதிகபட்சமாக ரூபா.5 இலட்சத்திற்கு மட்டுப்படுத்தியதால் பயனாளிகள் திட்டத்திலிருந்து விலகுதல்.

- உரம் இறக்குமதிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டாலும் மாவட்டத்தில் உரத் தட்டுப்பாடு ஏற்படாமல் காத்துக் கொள்ளுதல்.

2.2.4 தொழில்முயற்சிகளின் மேம்பாடு

- பொருளாதார நெருக்கடியினால் செலவினம் அதிகரித்தல் மற்றும் மூலப்பொருட்களின் விலை உயர்வு காரணமாக குறைந்த வருமானம் பெறுபவர்களின் சிறிய அளவிலான கருத்திட்டங்களை பராமரித்தல்.
- மூலப்பொருட்களின் விலை அதிகரித்தலின் காரணமாக தொழில்முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் உற்பத்தி பிரச்சினைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- அதிக வாழ்க்கைச் செலவு காரணமாக சந்தை வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்படுதல் காரணமாக புதிய சந்தை வாய்ப்புகளை தேடிக் கொடுப்பதற்கு முயற்சி எடுத்தல்.
- அரசு மற்றும் அரசு சாராத வங்கிகள் மூலம் தொழில்முனைவோருக்கு வழங்கப்படும் வங்கி கடன்களின் கட்டுப்பாடு மற்றும் அதிக வங்கி வட்டி விகிதங்கள் காரணமாக தொழில்முனைவோருக்கு கடன் வாய்ப்புகள் வழங்குவதை ஒருங்கிணைத்தல்.
- ஆராய்ச்சி நிறுவனங்களிடமிருந்து தரவு மற்றும் தொழில்நுட்ப அறிக்கைகளைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டாலும், வாடிக்கையாளர்களுக்கு உடனடி சேவைகளை வழங்குதல்.

2.2.5 மனிதவள மேம்பாடு

- வேலை வாய்ப்பு எதிர்பார்ப்பவர்களில் அதிகமானோர் அரசாங்க வேலைகளை எதிர்பார்ப்பதால், அவர்களை களப்பணிகளில் ஈடுபடுத்தல்.

- அதிக தேவை உள்ள ஆற்றல்கள் நிறைந்த வேலைவாய்ப்புகளின் பொருட்டு, ஆற்றல்களுடன் கூடிய நபர்களைக் கண்டறிதல். உதா, மின் தொழில்நுட்பவியலாளர், நீர் குழாய் தொழில்நுட்பவியலாளர்

2.2.6 நுகர்வோர் பாதுகாப்பு

- கருங்கற்கள் மற்றும் அதனைச் சார்ந்த உற்பத்திகளில் தேவை குறைந்து வருவதால் குறித்த தொழிலாளர்களை இந்த கைத்தொழில் துறையில் தக்கவைத்துக்கொள்ளுதல்.
- கொழும்பு மாவட்டத்தில் வெடிமருந்து பொருட்களை முறையாகவும் உரிய தொழில்நுட்ப முறைகளின் கீழும் களஞ்சியப்படுத்துவதற்காக களஞ்சிய தொகுதி நிர்மாணிப்பதற்கு பொருத்தமான நிலத்தைக் கண்டறிதல்.

2.2.7 சிறுவர்கள் மற்றும் மகளிர் பாதுகாப்பு மேம்பாடு

- விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் சிறுவர்களின் தந்தைமார்களின் பங்கேற்பு.
- அதிக வேலை பழுவின் மத்தியிலும், ஆரம்ப குழந்தை பருவ அபிவிருத்தி துறை பொருட்டு ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- பிற்படுத்தப்பட்ட சமூகங்களின் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க பிறப்புச் சான்றிதழ்களை வழங்குதல்.
- யாசகம் எடுக்கும் குழந்தைகளுக்கு நிவாரணம் வழங்கும் ஒரு நாள் செயற்பாட்டு திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட 44 யாசகம் எடுக்கும் குழந்தைகளுக்கு தேவையான சேவைகள் மற்றும் நிவாரணங்களை வழங்குதல்.
- ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் களத்திலும் தாபிக்கப்பட்ட சிறுவர் மன்றங்களைத் முனைப்பாக பராமரித்தல்.
- பாடசாலை செல்கின்ற வயதில் உள்ள அனைவரையும் பாடசாலைகளுக்கு அனுப்பிவைத்தல்.

- தொழில் தொடங்குவதற்கு சிறிய அளவிலான சுழற்சி கடன் (ரூ. 5,000 முதல் 30,000 வரை), மகளிர் சக்தி சபைகள் மூலம் வழங்கப்பட்டாலும், அதையும் தாண்டி, நிதி நிறுவனங்களால் கடன் பெற்றுக்கொள்கையில் விதிக்கப்பட்டுள்ள கடுமையான கடன் நிபந்தனைகள் காரணமாக பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு உதவி செய்தல். (எ.கா. அரசு அலுவலர்களுக்கு பிணை நிபந்தனைகள்).
- துன்புறுத்தல்களுக்கு உள்ளான பெண்களை தற்காலிகமாக தங்கவைப்பதற்கு பராமரிப்பு நிலையம் நிருமாணித்தல்

2.2.8 சமூக மேம்பாடு

- மாற்றுத்திறனாளிகளின் இயலாமையைக் குறைப்பதற்கு வழங்கப்படும் உதவி சாதனங்களின் இருப்புக்களை அதிகரித்தல்.
- ஆலோசனை சேவைகள் பற்றி வாடிக்கையாளர்களின் அணுகுமுறைகளை சரி செய்ய வேண்டிய அவசியம் காணப்படுதல்.

2.2.9 சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பயனுள்ள நிலப் பயன்பாடு

- பிரதேச செயலாளருக்குரிய, அரசாங்க காணிகள் தொடர்பான சில தகவல்கள் இல்லாத நிலையில் செயற்பட வேண்டிய நிலை ஏற்படுதல்.
- அடையாளம் காணப்படாத அரசாங்க காணிகள் மற்றும் சட்டவிரோத ஆக்கிரமிப்பு சூழ்நிலைகளில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுதல்.
- நிலத்தின் உரிமை மற்றும் பயன்கொள்ளுதல் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்காக, துல்லியமான மற்றும் இற்றைப்படுத்திய தரவுகளைப் பெற்றுக்கொள்ளுதல்.

2.3 எதிர்கால இலக்குகள்

2.3.1 நிறுவனம், நிர்வாகம் மற்றும் நிதியளித்தல்

